1967 ஜூலை 8]

திரு. எ. பாலசுப்பிரமணியன் : திருக்கோவில்கள், திருவிழாக்கள் பற்றி விளம்பரம் செய்வது, பிரசாரம் செய்வது இவற்றை சர்க்கார் ஏற்று நடத்துவதென்றால், சமயப்பற்றற்ற கொள்கைக்கு விரோதமானது என்று ஆட்சி கருதவில்லையா? அப்படிக் கருதினால், அதன் மீது என்ன யோசனை செய்யும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, இதெல்லாம் அரசாங்கத்தின் பணத்திலிருந்து செய்யப்படவில்லை. கோவில்களின் வருமானத்தில் மிச்சம் ஏற்படுவதிலிருந்து செய்யப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : சபாநாயகர் அவர்களே, இந்தப் படம் எங்கே காட்டப்படுகிறது? அமெரிக்காவிலே, ரஷ்யாவிலே காட்டப்படுகிறதா? வடநாட்டிலே காட்டப்படுகிறதா? தென்னாட்டிலே காட்டியதாகத் தெரியவில்லையே? எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்க விரும்பினால், ஏற்பாடு செய்யலாம். கண்காட்சி முதலியவற்றில் காட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பதினொரு வினாக்கள் இருக்கின்றன. திரு. கோதண்டராமன் அவர்கள்தான், அதிகமாக வினாக்கள் கேட்டுள்ளார்கள். அவர்களே இன்னொரு துணை வினா கேட்க விரும்புகிறார்களா? சரி.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தப் படத்திலே பணக்கார சாமி குடியிருக்கக்கூடிய கோவில்களை மட்டும்தான் எடுத்திருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் படத்தை நானே இன்னும் பார்க்கவில்லை. என்னென்ன வந்திருக்கின்றன, எப்படியெப்படி இருக்கின்றன என்பது தெரியவில்லை. குறிப்பாகப் பெரிய கோவில்களிலே உள்ள கலைச்சிறப்பு மிக்கதும், கண்கவர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளதும், பொது மக்கள் கூடுகின்ற திருவிழாக்களும் எடுக்கப்பட்டிருக்கும் என்று கருதப்படுகிறது. அந்த வகையில்தான் அது எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டுக் கோவில்களிலே சமரச சுத்த சன்மார்க்க சங்கத்துடன் சர்வ சமயமும் ஒன்று என்று அமைந்துள்ள வடலூர் சத்திய ஞான சபைக் கோவிலையும் இந்தப் படத்தில் சேர்த்து எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொல்லியபடி நானே அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. அது பற்றிய விவரம் இல்லை.

சட்டக் கல்லூரி நெறியாளரின் செயலாளர்

* 211 வினா.—**திரு. ஏ. எம். ராஜா :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சட்டப் படிப்பு நெறியாளரின் செயலாளர் பதவி, தொழில் நுட்ப பதவி என வகைப்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) சட்டப் படிப்பு நெறியாளரின் தற்போதைய செயலாளரின் பதவிக் காலத்தை நீட்டிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) நிர்வாக காரணங்களுக்காக.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, "செக்ரடரி டு தி டைரக்டர் ஆப் லீகல் ஸ்டடீஸை" அடிஷனல் டைரக்டர் இன் சார்ஜாக போட்டிருப்பது இந்த அரசாங்கத்துக்குத் தெரியுமா? அப்படி அடிஷனல் சார்ஜாகப் போட்டிருப்பதற்கு அடிஷனல் அலவன்ஸ் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

கிராமங்களுக்கு சிறு பஸ்கள்

* 212 வினா.—**திரு. வெ. முனுசாமி :**
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : } மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாலை வசதியுள்ள கிராமங்களுக்கு சிறிய பஸ் விடுவதற்குரிய திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிறிய (ஜீப்) பஸ்கள் கிராமச் சாலைகள் சிலவற்றில் முன்பே விடப்படுகின்றன. அத்தகைய பஸ்களை ஏனைய சில சாலைகளிலும் விடுவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கரூரிலிருந்து உப்பிடமங்கலம் வழியாக பஞ்சப்பட்டி வரையிலுள்ள கிராமங்களை இணைத்து பேருந்து வண்டிகள் துவங்க வேண்டுமென்று பல காலமாகக் கேட்கப்பட்டும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆகையால், நம்முடைய புதிய அரசாங்கமாவது கவனித்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்பற்றிக் குறிப்பு எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

1967 ஜூலை 8]

திரு. கொளத்தூர் கோதண்டம்: எந்தெந்த ஊர்களில் இந்த பஸ் விடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை தெரிவிக்க வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இந்த ஜீப் பஸ்கள் இரண்டு இடங்களில்தான் விடப்படுகின்றன. மதுரை மாவட்டம் திண்டுக்கல்லிலிருந்து சிறுமலை வரை. கோவை மாவட்டத்திலே பண்ணாரியிலிருந்து தாளவாடிக்கு திம்பம், தலைமலை வழியாக ஜீப் பஸ்கள் விடப்படுகின்றன.

திரு செ. பாலசுப்பிரமணியன்: கோவை மாவட்டத்தில் கிராமப் புறங்களில் அதிகப்படியான பஸ் வசதி இல்லாததால் கோவை மாவட்டத்தில் மேலும் இந்த மாதிரி பஸ்களை அதிகரிப்பதற்குச் சர்க்கார் அனுமதிதர முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றிய கோரிக்கைகள் எதுவும் வரவில்லை. வந்தால் அதுபற்றி ஆராயப்படும்.

திரு. வெ. முனுசாமி: தலைவரவர்களே, இந்த வேன் பஸ்கள் எவ்வளவு மைல் நீளம் போகலாம் என்று வரையறை உண்டா? எல்லா கிராமங்களையும் தொடர்பு படுத்துகிற வகையில் இந்தத் திட்டத்தை அமலாக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பெரிய நவீன பேருந்து வண்டிகள் செல்ல முடியாத காடுமுரடான பிரதேசங்களில் ஜீப் பஸ்கள் போகக்கூடிய அளவு செம்மைப்படுத்திய பிரதேசங்களில் மட்டும் அவை போகலாம். கிராமங்களை இணைக்கத்தக்க அளவுக்கு இருந்து, அதுபற்றிய கோரிக்கைகள் வருமானால் அவைபற்றி ஆராயப்படும் என்று முன்பே சொன்னேன்.

திரு. கே. சகாதேவ கண்டர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து 3 மைல், 4 மைல், 5 மைல், தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் திருவண்ணா மலைக்கு வர மிக மிகக் கஷ்டப்படுகின்ற நிலை இருப்பதால், அங்கு, திருவண்ணாமலையில் ஓடுகின்ற டவுன் சர்விஸை 10 மைல் தூரத் திற்கு விஸ்தீரணம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கேள்வி ஜீப் பஸ்களைப் பற்றியது.

Violence in villages

* 206 *Q.*—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state the number of villages in which violence has broken out between Harijans and others from 1st March 1967 to 19th May 1967?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: எட்டு கிராமங்கள் (ஆறு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், இந்துக்களுக்கும் மற்ற இரண்டு கிராமங்களில் ஹரிஜனங்களுக்கும், முஸ்லீம்களுக்கும்).